# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 8**
**AUGUST 2022 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**


Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே,

வாழ்த்துகிறேன்.

வழக்கம்போல் 2022 ஆகஸ்ட் ஜாமக்காரன் பத்திரிகையை 2022 நவம்பர் மாதம்தான் தபாலில் சேர்க்க முடிந்தது. அந்தந்த மாதங்களின் பத்திரிகையை அனுப்ப இயலாமல் போகும் நிலை தொடருவது பெரும் மனக்குறையாக இருக்கிறது. தேவையான பணம் நீங்கள் தொடர்ந்து அனுப்பியும் அச்சகம் மிகச் சிறியதாக இருப்பதாலும் அச்சக உரிமையாளர் 1969ம் வருடம் ஜாமக்காரன் தொடங்கப்பட்ட காலத்தில் ஆப்செட் **மெஷின் இல்லாத காலத்தில்** எழுத்துக்களை தனித்தனியாக கோர்த்து அச்சடித்து வெளியிடப்பட்ட அந்த காலத்திலேயே எங்களுக்கு மிகவும் பழக்கப்பட்ட நேர்மையான அச்சக உரிமையாளராகும், நானும் அவர்களிடம் கடன் சொல்லாமல் அச்சடிக்கும் முன்னமே அச்சக பணத்தை கொடுத்துவிடுவதாலும் அச்சக உரிமையாளர் எங்கள்மேல் மிகவும் மரியாதை உள்ளவராக பழகினார். அவர் தகப்பனார் மரித்தபின் சுமார் 42 வருடத்துக்கு பின் அவருடைய மகன் சிறிய

**ஆப்செட் மிஷின்** வாங்கி தொடர்ந்து அச்சகத்தை நடத்தினார். கொரோனா லாக்டவுன் காலத்தில் இந்தியா முழுவதும் அச்சக தொழில்கள் முடங்கி போன நிலையில் இந்த **அச்சகமும் மூட வேண்டிய** நிலைவந்த போது நம்முடைய ஜாமக்காரனை **தன் சிறிய ஆப்செட் மிஷினில்** அச்சடித்து தருவதாக கேட்டுக் கொண்டார். அவரும் தொழில் நொடிந்து போன நிலையில் இருந்ததால் அவரை **தொழிலில் தூக்கிவிடவும்** நொடிந்து போன நிலையில் அவருக்கு மறுவாழ்வு கொடுக்கும் வண்ணம் மேலும் **கர்த்தராகிய இயேசு கிருஸ்துவை அவர் நம்பினதால்** ஜாமக்காரனை அவரே தொடர்ந்து அச்சிட்டு கொடுக்க ஏற்பாடு செய்தேன். இதன் மத்தியில் ஜாமக்காரன் பத்திரிக்கையின் எண்ணிக்கை மிக அதிகமாகி கொண்டிருப்பதால் சென்னை- சிவகாசி - மதுரை ஆகிய இடங்களில் உள்ள பெரிய அச்சக உரிமையாளர்கள் நம்முடைய வாசகர்களாக இருப்பதால் தாங்கள் அச்சகத்தில் இரண்டே நாளில் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் இருந்தாலும் அச்சடித்து தருவதாக நேரிலேயே என்னை சந்தித்து கேட்டுக் கொண்டார்கள். அவர்களிடம் இப்போது உள்ள அச்சகத்தைப்பற்றியும் எங்கள் பழங்கால **தொடர்புகளைப்பற்றியும்** கூறி பத்திரிக்கை வெளியாவதில் தாமதமானலும் **அச்சகத்தை மாற்ற நான் இணங்கவில்லை.**

ஆகவே தான் நம் பத்திரிக்கை ஒவ்வொரு முறையும் தாமதமாக வெளிவரும் நிலை தொடருகிறது. இவைகளை குறித்து இரண்டுவருடங்களுக்கு முன்பே எழுதினேன். ஆனாலும் **புதிய வாசகர்கள்** புதிய **தலைமுறைகள்** ஜாமக்காரனை வாசிப்பவர்களாக அவர்களின் **எண்ணிக்கை பெருகியதா**ல் தாமதத்தின் காரணத்தை அவர்களும் அறிய வேண்டி **அச்சக விஷயத்தை** மறுபடியும் எழுதினேன்.

தாமதத்துக்கு வாசகர்கள் பொருத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

- ☐ உங்கள் தொடர்ந்த ஊழிய ஆதரவுக்கு நன்றி, காணிக்கைகளுக்கு நன்றி.
- ☐ M.O, ONLINE, MONEY GRAM, WESTERN UNION, **செக்** மூலமாக அனுப்பிய காணிக்கைகள் யாவும் கிடைத்தது மிக்க நன்றி.
- ☐ நான் மறுபடியும் **கன்வென்ஷன் ஊழியம்** தொடங்கியதை ஏற்கனவே எழுதினேன். அதன்படி இதோடு **3 கூட்டங்கள்** வெற்றிகரமாக முடிந்தது.

**அக்டோபர்** மாத இறுதியல் நானும் **Dr.முரளிதர்** அவர்களும் டிரைபிள் மிஷன் தொடங்கிய ஆரம்ப கால இடமான **நிலம்பூர் வன பகுதிக்கு** போய் வந்தோம். நாங்கள் முதன்முதலில்

சுவிசேஷம் அறிவித்த **சோலநாயன்மார், இருளர்** போன்ற ஆதிவாசிகள் மத்தியில் நம் **டிரைபில் மிஷன் மிஷனரிகள்** தொடர் ஊழியம் செய்ததால் அங்கு இயேசுவை ஏற்றுக் கொண்ட **ஆதிவாசிகள்** மத்தியில் **ஆராதனை தொடங்கப்பட்டுள்ளது**. அந்த மக்களையும் மிஷனரிகளையும் சந்தித்து அங்கு **ஒரு ஆலயம்** பணியும் ஏற்பாடுகளை செய்து வந்தோம். அந்த சிறு கூட்டத்தில் கர்த்தருடைய நற்செய்தியை அறிவித்து அவர்களை உற்சாகப்படுத்த கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

☐ கர்த்தருக்கு சித்தமானால் உங்கள் ஊர்களில் என் கன்வென்ஷன் கூட்டம் நடந்தால் மீண்டும் நாம் நேரில் சந்திப்போம்.

☐ கர்த்தரின் கிருபை நம் அனைவரோடும் இருப்பாதாக தொடர்ந்து உங்களுக்காக ஜெபிப்பேன். நீங்கள் எழுதிய கடிதங்கள் Email க்கள் யாவுக்கும் பதில் எழுத நேரம் இல்லாமல் இருப்பதால் உங்கள் ஜெபக்குறிப்பை மட்டும் வாசித்து உடனடியாக ஜெபித்தேன். பதிலும் கொஞ்ச கொஞ்சமாக எழுதி அனுப்புவேன்.

☐ பதில் கிடைக்காதவர்கள் லேண்ட்லைனில் தொடர்பு கொள்ளாமல் **என் மொபைல் போன் வழியாக** (9894261333) தொடர்பு கொள்ளவும். உடனே லைன் கிடைக்காமல் போனாலும் மிஸ்ட்டு கால் பார்த்து நானே உங்களை அழைத்து பேசி ஜெபிப்பேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**- Dr. புஷ்பராஜ்**

## ONLINE BANKING (NEFT)

### Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

| | |
|---|---|
| IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 | **A/C No: 10764116842** |
| SWIFT CODE - SBININBB300 | **A/C No: 10764116842** |

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

| | |
|---|---|
| IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. | **A/C No: 1219101013622.** |
| SWIFT CODE - CNRB0001219 -1219101013622. | **A/C No: 1219101013622.** |

# பயித்தியக்கார நவீன அன்னிய பாஷை

தமிழ்நாட்டில் **கள்ள** ஊழியர்கள், **கள்ள** உபதேசங்கள் பெருகிவிட்டது. அப்படியே **பொய்யான அன்னிய பாஷைகளும்** பெருகிவிட்டது. கிறிஸ்தவ TV சேனல்களிலும் இரவு ஜெப கூட்டம் நடத்தும் ஊழியங்களிலும், Online வழியாக ஜெப கூட்டம் நடத்தும் ஊழியர்களிலும் பல பெந்தேகோஸ்தே சபைகளிலும் **பொய் அன்னிய பாஷைகளை** பேசுவதைக் கவணிக்கலாம்,

**அவர்கள் பேசுவதுபொய் அன்னிய பாஷை** என்பதை டேப் ரிக்கார்டர் மூலம் அறியலாம். என்று **மொபைல் வராத காலத்தில்** என் வாசகர்களுக்கு ஆலோசனையாக கூறினேன். இந்த நவீன காலத்தில் **மொபைல்** மூலமாக அவர்கள் **பொய் பாஷைகளை** பதிவு செய்து ஒரு மாதம் கழித்து அதை இயக்கி கேட்கச் சொன்னேன். அதன் பிறகுதான் நான் எழுதிய உண்மையை உணர்ந்தார்கள். லட்ச கணக்கானவர்கள் தெளிவுபெற்று நன்றி கூறி எனக்கு எழுதினார்கள். இவர்கள் தெளிவு பெற்றாலும் **பொய் ஊழியர்கள் திருந்தவில்லை**. இவர்கள் இன்னும் எத்தனை புதிய ஆத்து மாக்களை **பயித்தியங்களாக்க** போகிறார்களோ ?

**பொய் அன்னிய பாஷை** தொடக்கம் **அமெரிக்காவில்** முழு இரவு ஜெபம் அன்று ஒரு பெண் உணர்ச்சிவசப்பட்டு உளரியதை கேட்ட சிலர் அதை **அன்னியபாஷை** என்று கூற அன்று தொடங்கியதுதான் இந்த **அன்னிய பாஷை கூத்து.**

இந்தியாவில் முதலில் **சிலோன் பெந்தேகோஸ்தே** சபை (TPM), அன்னிய பாஷை பேச தொடங்கியது, அடுத்து அதிலிருந்து பிரிந்த ACA. AOG, IPC இப்படி சிதறு தேங்காய்போல தெருவுக்கு ஒரு **பெந்தேகோஸ்தே சபைகள்** ஈசல்போல் பெருகிபோனது. இவர்கள் எல்லாரும் மக்களை கவர உபயோகிக்கும் ஒரே ஆயுதம் **அன்னிய பாஷை** ஆகும். பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் எல்லாருக்கும் **தசம பாகம்** என்ற பெயரில் **சபை**

**மக்களின் பணத்தை** சுறண்டுவதுதான் **பிரதான நோக்கம். தசம பாகம்** என்ற உபதேசம் **புதிய ஏற்பாட்டு சபைக்கு இல்லை** என்பது இவர்கள் எல்லாருக்கும் தெரியும்.

**அன்னிய பாஷையை** முக்கியத்துவப்படுத்தும் ஒரு சில ஊழியர்களின் பெயர் மட்டும் இங்கு குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று நம்புகிறேன், இவர்கள் யாரும் **என் விரோதிகள்** அல்ல. இவர்கள் யாரும் என் **ஊழியத்துக்கு வரும்** காணிக்கைகளை தடுப்பவர்களும் அல்ல. இவர்களால் **எனக்கோ** என் **ஊழியத்துக்கோ** இடையூறுகள் எதுவும் இல்லை. ஆனால் இவர்கள் எல்லாரும் **அன்னிய பாஷை** என்ற **தவறான உபதேசத்தால்** மக்களை கெடுக்கிறார்கள். **வசனம் தெரியாத** அரைகுறை கிறிஸ்தவர்களைத்தான் இவர்கள் குழப்பு கிறார்கள். இவர்கள் கையிலிருந்து எத்தனை நபர்களை என் **ஜாமக்காரன்** பத்திரிகையால் **விடுவிக்க முடியுமோ** அதை ஜெபத்தோடு நான் வசன அடிப்படையில் எழுதும் கட்டுரைகளால் விளங்கவைக்க முயற்சிக்கிறேன்.

# காதுள்ளவன் கேட்கக்கடவன்

நீங்கள் கீழே வாசிக்கும் **வேறொரு பத்திரிக்கையின்** செய்திகள் **அன்னிய பாஷை** பேசும் சில புதிய பைத்தியங்கள் பேசிய **பயித்தியக்கார உபதேசத்தை பகிரங்கப்படுத்தி யுள்ளார்கள்.** அதை வெளியிட்ட **பத்திரிகையாளர்களாலேயே** அந்த உபதேசத்தை சகிக்க முடியாமல்தான் அதை பகிரங்கமாக வெளியிட்டிருக்க வேண்டும். மேலும் இந்த கன்றாவி உபதேசங்களை **வெளிப்படையாக** எழுதினாலாவது அந்த **பொய் உபதேசத்தை** கூறியவர்கள் கொஞ்ஜமாவது தங்கள் மனதிலே சூடுபடமாட்டார்களா ! என்ற நல்ல எண்ணத்தில் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் பத்திரிகையில் குறிப்பிட்ட இப்படிப்பட்ட ஊழியர்களை **தாங்குபவர்களில்** ஒரு சிலராவது விழித்துக்கொள்ளமாட்டார்களா! என்ற எண்ணத்தில் இவைகளை அவர்கள் வெளியிட்டிருக்கலாம்.

மேலே நான் எழுதியபடி இந்தியாவில் பேசப்படும் இந்த **பொய் பாஷைகளுக்கெல்லாம்** மூலவர்கள் அந்த காலத்து **சிலோன் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள்தான்.** இவர்களில் இருந்து பயிற்சிபெற்று பிரிந்து வந்தவர்கள்தான் பல பெயர்களிலுள்ள மற்ற சில்லரை **பெந்தேகோஸ்தே** சபைகளாகும். இவர்களிலிருந்து சில நபர்கள் பிரிந்து **தனி வியாபாரம்** நடத்த பெந்தேகோஸ்தே சபைகளிலிருந்து பிரிந்த ஒரு கூட்டம் உண்டு. அவர்கள் எந்த சபையிலும் நிரந்தர உறுப்பினரல்லாத **மேடை** பிரசங்கிகளும், **சுகமளிக்கும் ஊழியங்களை** நடத்துபவர்களும் அகும், இவர்களில் சிலர் மக்கள் அனைவரையும் **தீர்க்கதரிசிகளாக்கும்**

உபதேசம்கொண்ட **பொய்யர்கள் ஆகும்.** இவர்களில் பலர் **TV சேனல்களை** நடத்து கிறார்கள். கிறிஸ்தவ TV **சேனல்களில்** பிரசங்கிப்பவர்களில் சிலர் கள்ள உபதேசங்களை பின்பற்றுபவர்களாகும்.

தமிழ்நாட்டை பொருத்தவரை இத்தனை **பொய் அன்னிய பாஷை** பேசும் ஊழியர்களுக்கும் **முதல் மூலக்காரணர்** இயேசு அழைக்கிறார் **ஸ்தாபகர்** மரித்த **D.G.S.தினகரன்** அவர்களாகும். இவர் பட்டறையிலிருந்து வெளிவந்தவர்கள் அல்லது இவர் ஊழிய மாதிரியை அப்படியே **காப்பியடித்து** பிரசங்கிப்பவர்கள்தான் சகோ.**மோகன்C.லாசரஸ்,** இவரோடு இணைந்தவர் **ஏஞ்ஜல் TV** முதலாளி **சாது செல்வராஜ்** என்பவர் ஆகும். இவர் கர்த்தர் என்னை **திபெத் ஊழியத்தைதான்** செய்ய சொன்னார் என்று **ஆஸ்திரேலிய** நாட்டு தமிழ் பேசும் மக்களையும் **சிங்கப்பூர்,** மலேசியா, **இலங்கை,** ஜெர்மனி போன்ற நாடுகளில் வாழும் **இலங்கையிலிருந்து** புலம் பெயர்ந்த **தமிழர்களையும்** ஏமாற்றியவர் ஆகும்.

வெருமனே **திபெத்தை** சுற்றிப்பார்க்க செல்லும் **சுற்றுலா பயனிபோல** சுமார் 3 அல்லது 4 முறை திபெத் அடிவாரம் வரை சென்று சில **புகைப்படங்களோடு** திரும்பி வந்தவர் ஆகும். இவரைப்போல **சாது செல்லப்பா** அவர்களும் **இந்துக்கள்** மத்தியில் ஊழியம் செய்யத்தான் நான் **காவி உடையணிந்தேன் என்றார்.** ஆனால் இவர் கல்யாணம் செய்து சுமார் 6 பிள்ளைகளை பெற்று **சாது என்ற பெயரோடு ஆரம்ப காலத்தில் இந்துக்கள் மத்தியில் மட்டும்** நல்ல ஊழியம் செய்தார். கொஞ்ஜம் வசதி வந்தவுடன், **கிறிஸ்தவர்கள் மத்தியில் மட்டும் அன்னிய பாஷைகளை** பேசி ஊழியம் செய்தார்.

அதோடு தான் **பிரமாண குடும்பத்தில் பிறந்தவன்** காலை மந்திர சுலோகம் சொல்லாமல் எனக்கு என் பாட்டி **இட்லி கொடுக்கமாட்டார்** என்று புளுகியவர். ஜெர்மனியில் வாழும் இலங்கை தமிழர்கள் மத்தியில் பிரசங்கிக்க நோட்டீஸில் **பிராமண குலத்திலிருந்து** கிறிஸ்தவனாக மாறியவர் என்று விளம்பரப்படுத்தச்சொல்லி வினியோகம் செய்த அச்சடிக்கப்பட்ட அந்த நோட்டீஸ் என் கையில் கிடைத்தது. என் ஒழுங்கின்படி அவருக்கு கடிதம் எழுதி குறிப்பிட்ட குற்றசாட்டுகளைப்பற்றி கேள்வி கேட்டேன். காரணம் அவர் **குலம்** கோத்திரம் யாவும் அறிந்தவன் நான். சேலம் அருகே **திருச்செங்கோடு** என்ற ஊரிலிருந்து இவர் கதை ஆரம்பிக்கும். சென்னை தாம்பரம் பாஸ்டர் **பாஸ்கரதாஸ்** அவர்களின் சபை அங்கத்தினனாகி **அன்னியபாஷை** கற்றுக்கொண்டவர். **இந்து தெய்வங்களை** கிறிஸ்துவோடு ஒப்பிட்டு இவர்

**சரளமாக பேசும் இந்து சுலோகங்கள்** மூலம் இந்து தெய்வங்களைப்பற்றிய **ஒப்பீடுகள்** அத்தனையும் அவருக்கு கற்றுக் கொடுத்தவர் **சென்னை** புலவர் **Dr.தெய்வநாயகம்** அவர்களாகும். நான் சுட்டிக்காட்டிய அத்தனையும் அவர் ஒப்புக்கொண்டு முதலில் தான் பேசி வந்த பொய் **அன்னிய பாஷைக்காக** மண்ணிப்பு கேட்டு, தான் **பிராமணன்** என்றும் **நாடார்** என்றும் இடத்துக்கு தக்கதாக கூறிவந்ததற்கும் **மண்ணிப்பு** கேட்டு எனக்கு எழுதிய கடிதத்துக்குபின் அவரைப்பற்றிய தவறுகளை ஜாமக்காரனில் நான் சுட்டிக்காட்டி எழுதவில்லை. அவர் மரணத்துக்கு இரண்டு நாட்களுக்குமுன் எனக்கு எழுதிய **மலேசியா ரிக்கார்டிங் இரகசியம்** என்ற தலைப்பிட்டு எழுதிய கடிதம் இன்றும் என்னிடத்தில் உண்டு.

ஆனால் ஏஞ்ஜல் TV முதலாளி **சாது செல்வராஜ்** தன் ஊழியத்தை **திபெத் ஊழியம்** என்று பொய் கூறி வசூலித்த **காணிக்கை பணத்தை** வைத்து எப்படியோ **ஏஞ்ஜல்** என்ற பெயரில் TV ஊழியத்தை தொடங்கி வெற்றிகரமாக நடத்தி ஜனங்களை ஏமாற்றி குழப்பி வருகிறார். வயிற்றிலிருக்கும் **குழந்தையை தீர்க்கதரிசிகளாக்கும்படி** கர்த்தர் கூறினார் என்று பல **கர்ப ஸ்திரிகளை** ஏமாற்றினார். இப்போது **கோடீஸ்வரராகிவிட்டார்.** இவரும் **அன்னிய பாஷை** பயிற்சி எடுத்து **தீர்க்கதரிசனம்** உறைப்பது எல்லாம் சகோ.**DGS தினகரன்** நடத்திய **பவர் ஊழிய பயிற்சி** முகாமில்தான். **நாலுமாவடியும்** அங்குதான் பயிற்சி பெற்றார். அதன்பின் **சாது செல்வராஜ்** பாளையம்கோட்டை **சகோ. ஜான் ரபீந்திரநாத்** என்ற பிசாசு துரத்தும் ஊழியரிடம் அவர் தோட்டத்திலேயே தங்கி அவர்களின் சீடனானார்.



சகோ. மோகன் C. லாசரஸ் — வின்சென்ட் செல்வகுமார் — சாது செல்வராஜ்

பல காலம் கழித்து நாலுமாவடி **மோகன் C. லாசரஸ்**, சகோ. **வின்செண்ட் செல்வகுமார், சாது செல்வராஜ்** ஆகியவர்கள் **கூட்டணி அமைத்து** ஏஞ்ஜல் **TVயில் சில** மாதங்கள் **பொய் தீர்க்கதரிசனங்கள் கூறி, ஒரு நாளைக்கு 8 முறை பரலோகம் சென்று வந்ததாகவும் பரலோகத்தில் இயேசு** இவர் கையில் ஒரு சினிமா **வீடியோ டேப் கொடுத்து** இதைபோல் ஏஞ்ஜல் **TV சேனல்** உலகத்தரத்தில் இருக்க வேண்டும் என்று கூறினாராம். Tea with Ayya என்ற பல மணி நேர நிகழ்ச்சியில் வடை சாப்பிட்டுக்கொண்டே உலக மகா **பொய் செய்திகளை** கூறுவார்.

☐ அப்படியே **வின்செண்ட் செல்வகுமார்** என்பவர் ஒரு பெரும் **பொய்யை அவிழத்து விட்டார் பாருங்கள்,** பலர் அதை நம்பிவிட்டார்கள். கர்த்தர் **யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தை** அருளியபிறகு கடைசியாக தனக்கு ஒரு **தீர்க்கதரிசன வெளிபாட்டை புத்தகமாக எழுதி அளித்தாக** கூறி அதை **புஸ்தகமாக தொகுத்து** அதில் எழுதிய **பொய் தீர்க்கதரிசனத்துக்கு மோகன் C லாசரஸ்** விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார். அதில் அளவுக்கு மீறின பொய் தீர்க்கதரிசனங்ளை கூறினார். TVயில் இந்த காட்சியை கண்ட **வேதம் அறிந்த விசுவாசிகள்** ஊழியர்கள், சபைகள் யாவரும் **மோகன் C. லாசரஸ்க்கு** கண்டனம் செய்து கடிதம் எழுதியதாக கேள்விப்பட்டு **மூவரணிக்குள்ளேயே பிரச்சனை** எழும்பியது . **கர்த்தர் திட்டமாக என்னிடம் சொன்னதால்தான்** ஏஞ்ஜல் TVயில் **மூவரணி** நடத்திய நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன் என்று கூறிய மோகன்C.லாசரஸ் **அதே கர்த்தர்** மறுபடியும் என்னிடம் **திட்டமாய் பேசினார்.** மற்ற இருவராகிய **வின்செண்ட் செல்வகுமார். சாது செல்வராஜ்** ஆகியவர்களைவிட்டு **பிரிந்துவிடு** என்றாராம், **கர்த்தர் சொன்னார்** என்ற பொய்யை **மோகன் C. லாசரஸ்** மிக சரளமாகபலமுறை உபயோகித்து மக்களிடம் **பலமுறை மாட்டிக்கொண்டார்.**



வின்செண்ட் செல்வகுமார்

அதன்பிறகு **ஏஞ்ஜல்** TV **சாது செல்வராஜ்** அவர்களுடன் **மோகன் C. லாசரஸ்** தொடர்பை நிறுத்திக்கொண்டார். அந்த தீர்க்னதரிசன நிகழ்ச்சியும் ஏஞ்ஜல் TVயில் நிறுத்தப்பட்டது. ஆனால் சில ஆண்டுகள் கழித்து இப்போது மறுபடியும் பொய் தீர்க்கதரிசியான **வின்செண்ட் செல்வகுமாருடன்** இணைந்து மோகன் C. லாசரஸ் செயல்பட ஆரம்பித்து விட்டார்.



சாது செல்வராஜ்

அப்படி இவர்கள் இணைந்த பிறகு கூறிய **பொய் அன்னிய பாஷையின்** உட்பிரிவாக வின்செண்ட் செல்வரமகுமார் அவர்கள் **யுத்த பாஷை** என்ற ஒரு **வரம்** இருப்பதை அறிமுகப்படுத்துகிறார். அவைகளைப்பற்றி கீழே உள்ள **பத்திரிகையை செய்தியை** படித்து தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு கீழே என் விளக்கத்தை எழுதியுள்ளேன். அதையும் வாசித்து தெளிவு பெறுங்கள்.

# யுத்த பாஷை

*பத்திரிகை பெயர் :* **ஏசுவே வாசல்**

பவுல் அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு எழுதியிருக்கும் இரண்டாம் நிரூபம். நான்காம் அதிகாரம், நான்காம் வசனத்தில் **சத்தியத்துக்கு செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்கு சாய்ந்துபோகும் காலம் வரும்** என்று ஆவியானவரின் ஏவுதலால் பவுல் எழுதியிருக்கிறார். அந்தக் காலங்கள் **இப்பொழுதே வந்திருப்பதை** திரு. **வின்செண்ட் செல்வகுமார்** பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் கூடியிருக்கும் ஒரு கூடுகையில் **யுத்தப் பாஷை** என்ற ஒரு அன்னிய பாஷையாகிய பரிசுத்த ஆவியின் **புதிய வரத்தை** அறிமுகப்படுத்தி பேசுகிறார்.

**பெந்தேகோஸ்தே** நாளில், இந்த **யுத்த பாஷை** என்ற புதிய **அன்னிய பாஷை** அப்போதைக்கு **தேவையில்லை** என்று **ஆவியானவர் இந்தப் பாஷையை விட்டுவிட்டாராம்.** ஆனால் இப்பொழுது இது **கடைசி காலமாய்** இருப்பதால் **சத்துருவாகிய பிசாசானவனை** எதிர்த்து **நாம் போரிட** வேண்டியிருப்பதால், பரிசுத்த ஆவியின் நிறைவை பெறும்பொழுது **அந்நிய பாஷை பொழிந்தருளப்படுவதுபோல் இந்த புதிய யுத்த பாஷையும் நமக்குள் ஊற்றப்படுமாம்.**இதை பரிசுத்த ஆவியானவர் திரு. **வின்செண்ட் செல்வக்குமார்** அவர்களுக்கு மட்டும் கடந்த ஆண்டு 2021ல்தான் கற்றுக்கொடுத்தாராம்.

**அந்நிய பாஷை** பேசும் பொழுது **முதலாவது** எப்படி அந்த வார்த்தைகள் நமக்கு **உச்சரிப்பதற்கு கடினமாயிருந்து** பின்பு **பழகப்பழக** அது **சரமாரியாக** நம் நாவிலிருந்து வருகிறதோ **அதேபோல** பரிசுத் ஆவியானவர் இந்தக் கடைசிய காலத்தில் **பிசாசிற்கு விரோதமாய் போராட இந்த பாஷையை புதிய வரமாக** (அதாவது வேதத்தில் **பத்தாவது வரமாக**) **விசுவாசிகளுக்கு** கொடுக்கிறாராம். ஆவியானவர் கொடுத்த **யுத்த பாஷை** ஆரம்பத்தில் உபயோகிக்க **கஷ்டமாகத்தான்** இருக்கும், ஆனால் விசுவாசிகள் அதை விட்டுவிடாமல் **பேசி பயிற்றுவித்து பழக்கினால்**, பிசாசை அழித்துவிடலாம் என்றும் **கிராமங்களிலும்,** பட்டணங்களிலும், **நகரங்களிலும் ,** விசுவாசிகளின் **வீடுகளிலும் கிரியை செய்யும் பிசாசை இந்த யுத்த பாஷையைக்கொண்டு அழித்துவிடலாம்** என்று ஆவியானவர் ஜனங்களுக்கு **போதிக்க தன்னிடம் மட்டும் சொல்லி** இருக்கிறாராம்.

இந்த யுத்த பஷையானது நம் **அடிவயிற்றிலிருந்து** புறப்படுமாம். **யுத்த பாஷையில்** ஜெபிக்கும்பொழுது அதிலிருந்து **பிளேடைவிடக் கூர்மை வாய்ந்த ஒரு சக்கரம் போன்ற**

**ஒன்று புறப்பட்டு** நமக்கு விரோதமாய்போராடும் **சாத்தானில் தலையைக்** கொய்துக்கொண்டு **போய்விடுமாம்**. அதன்பின் **அந்த சாத்தான்** செத்துப்போய் விடுவானாம். இது ஏதோ **புராணக் கதைகளில்** பார்த்ததுபோலக் **கேட்டதுபோல** இருக்கிறதல்லவா? திரு. **வின்செண்ட் செல்வகுமார்** ஏதோ TV சீரியல் அல்லது **தெலுங்கு டப்பிங் சினிமா படம்** பார்த்திருப்பார் போலிருக்கிறது.

வாசகர்களுக்கு **சாத்தான் எப்பொழுது சாவான்** என்று தெரியுமல்லவா? **சத்தியத்திற்கு** உங்கள் செவியை விலக்கி, இத்தகையக் **கட்டுக்கதைகளுக்கு** செவியை **சாய்க்கும் காலம்** வரும் என்று பவுல் **அப்போஸ்தலரால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்** காலம் வந்துவிட்டது. **அந்நிய பாஷை** எப்படி முழு இரவு ஜெபக்கூட்டங்கள் **உபவாசக் ஜெபக்கூட்டங்கள்** வழியாக **திருச்சபைகளுக்குள்** நுழைந்ததோ அதேவிதமாக இது இனிமேல் வெகு சீக்கிரத்தில் **எல்லாச் சபைகளுக்குள்ளும்** நுழையவிருக்கிறது. திரு. **வின்செண்ட் செல்வக்குமார்** கொடுக்கும் உபதேசம் **புறட்டு உபதேசம்**, **சாத்தானின் உபதேசம்** ஆகும். உங்கள் செவியை அதற்கு சாய்க்காமல் காத்துக்கொள்ள **பரிசுத்த வேதாகமத்தை** கருத்தாய் நேரம் எடுத்து ஜெபத்தோடு வாசியுங்கள். **ஐயோ !** எனக்கு **திருமறையை** புரிந்துகொள்ளும் அளவிற்கு ஞானமில்லையே! என்று புலம்புவீர்களே யானால் யாக் 1:5ன்படி ஞானத்தை **தேவனிடத்தில் கேளுங்கள்,** அவரே உங்களுக்கு ஆவியானவர் மூலமாக **உபதேசிக்கவும்** செய்வார், அதற்கு செவி கொடுங்கள் இத்தகைய **பேச்சாளிகளுக்கும்** இவர்களை கூட்டங்களில் பயன்படுத்தும் ஊழியர்களாகிய **பசுந்தோல் போர்த்திய புலிகளுக்கும்** விலகியிருங்கள் . இனியும் காலம் செல்லாது. (வெளி.10:6)

# யுத்த பாஷை விளக்கம்

நீங்கள் மேலே வாசித்த பத்திரிகை செய்தி **உண்மை சம்பவம்** ஆகும். **ஏசுவே வாசல்** என்ற பத்திரிகையிலிருந்து எடுத்தாளப்பட்டது. சகோ, **வின்செண்ட் செல்வக்குமார்** என்பவருக்கு வேதத்தில் இல்லாத **புதிய வெளிப்படுத்தின விசேஷம்** என்ற தீர்க்கதரிசனங் களை இவருக்கு ஆவியானவர் காண்பித்து அதை **புஸ்தமாக்க சொன்னாராம்.** அதைத்தான் **நாலுமாவடி மோகன் C. லாசரஸ்சும், சாது சுந்தர் செல்வராஜ் (ஏஞ்ஜல் TV)** ஆகியவர்கள் அந்த போலி புஸ்தகத்திலிருந்து **ஒவ்வொரு தீர்க்கதரிசன வார்த்தைகளையும் வின்செண்ட் செல்வகுமார்** வாசிக்க மற்ற இருவரும் அதற்கு **வியாக்கியானம்** கொடுத்தார்கள். இதை **ஏஞ்ஜல் TV**யில் லட்சக்கணக்கான மக்கள் பார்த்து கேட்டு, அதை என்று நம்பி **சீர்கெட்டுப்போனார்கள்.**

**வின்செண்ட் செல்வகுமார்** கூறியதே **பொய் தீர்க்கதரிசனம் ஆகும்.** அதற்கு **வியாக்கியானம்** கூறும் **மோகன் C. லாசரஸ்** எத்தனை பெரிய **பொய்யராக இருப்பார்.**

என்பதை யோசியுங்கள். முட்டாள் தனமாக **கண்மூடிதனமா**க இவர்கள் கூறும் **தீர்க்கதரிசனங்களை** நம்பாதீர்கள். மறுபடியும் கூறுகிறேன், இந்த **மூன்று ஊழியர்களையும்** நம்பி ஏமாந்து போகாதீர்கள் ! எச்சரிக்கிறேன்.!

சகோ. **வின்செண்ட் செல்வகுமாருக்கு** பிசாசு **புதிதாக வெளிப்படுத்தின விசேஷத்தை** கர்த்தர் கூறியதைப்போல்கூற அதை அவர் **எழுதி புஸ்தகமாக்கினார்.** அது **பிசாசின் பொய்யான** வெளிபாடு ஆகும், ஆனால் அதற்கு **பரிசுத்தாவியனவர் மிகத் தெளிவாக என்னொடு பேசினார்** என்று கூறிய **மோகன் C. லாசரஸ்** கூறுவது எத்தனை பெரிய பொய்யர் என்பது வாசிக்கிற உங்களுக்கு விளங்கவில்லை ! இந்த **பொய் பேசும்** கூட்டணியில் ஒருவர்தான் **சாது சுந்தர் செல்வராஜ், பொய்க்கு பிதாவாக** அவரும் தன் பங்குக்கு அந்த தீர்க்கதரிசன புத்தகத்துக்கு **விளக்கம் கொடுத்துள்ளார்.** இப்போது இப்படிப்பட்ட **பொய் தீர்க்கதரிசனங்களை** உலக முழுவதற்கும் கொண்டுசெல்ல **ஏஞ்ஜல் TV யைதா**ன் கர்த்தர் **முதலில் தெரிந்தெடுத்தாகவும்** அதற்கு இப்போதுள்ள **அலுவலக கட்டிடம்போதாது. பல கோடி ரூபாய்** திட்டமுள்ள மிக பிரம்மாண்டமான கட்டிடத்தின் வரைபடம் ஒன்றை கொடுக்க **சாது செல்வராஜை** கர்த்தர் **பரலோகத்துக்கு** கூட்டிசென்று அதன் வரைபடத்தை அவர் கையில் ஒப்படைத்தாராம்.

இது சகோதரன் **DGS தினகரனுக்கு** தூதர்கள் **காருண்யா வரைப்படத்தை** கொடுத்து இதைப்போல காருன்யா கட்டிடத்தை கட்டு என்றராம். அதையே இவரும் **காப்பியடித்து** கர்த்தரே தனக்கு வரை படத்தை கொடுத்தாக புளுகுகிறார். அந்த வரை படத்தில் உள்ளதைப் போல **பல கோடி ரூபாயில்** கட்டிடம் கட்ட அதற்கு **பணம் சேகரிக்க** பல பெரிய ஊழியக்காரர்களை தெரிந்தெடுத்து அவர்களே அந்த கட்டிடததை கட்ட **சிபாரிசு செய்வதுபோல** அந்த நபர்களை கேமிரமுன் அமரவைத்து வீடியோ எடுத்து ஒவ்வொருவரையும் **பேச வைத்து விளம்பரத்துக்கு உபயோகித்திருப்பதை** நீங்கள் TVயில் கண்டிருப்பீர்கள்.

- ☐ உபயோகப்படுத்தப்பட்ட நபர்களில் ஒருவர் **ஆவடி ACA சபை பாஸ்டர்** காப்பிரியேல் அவர்களின் **தம்பி ஜோயலும் ஒருவர்,** நல்ல உபதேசத்தில் வளர்ந்தவர். **சாது செல்வராஜ்** ஒரு **மாய்மாலக்காரர், பொய் தீர்க்கதரிசனம்** உரைப்பவர் என்று இவருக்கு நன்றாக தெரியும். மேலும் வயிற்றில் **கருத்தரிக்கப்பட்ட பெண்கள்** ஏஞ்ஜல் TV ஸ்டூடியோவுக்கு வந்து **வயிற்று குழந்தையை** தீர்க்கதரிசியாக மாற்ற அங்கு நடக்கும் ஜெபத்தில் **அன்னிய பாஷையில் பேசி ஜெபிக்க வேண்டும்** என்ற கூறின **தவறான உபதேசத்துக்கு** வசதியான பெரிய கட்டிடத்தை கட்ட பண உதவி செய்யுங்கள் **என்று இவர் சிபாரிசு செய்கிறார். 3 வயது** பிள்ளைகளின் **சொப்பனத்தில் தூதன் வந்து தீர்க்கதரிசனம்**

கூறுவான். அதை மறுநாள் கூற வேண்டும என்ற **கள்ள உபதேசத்தை அறிவிக்க** பல கோடி ரூபாயில் **பெரும் கட்டிட திட்டத்துக்கு** பணம் கெடுக்கும்படி இவர் சிபாரிசு செய்கிறார். இந்த கட்டிடத்துக்கு **பெரும் தொகை காணிக்கை** அனுப்புபவர்களை **கர்த்தர் நூறு மடங்கு ஆசீர்வதிப்பார்** என்ற பொய்யான ஆசை **வாக்கை** பாஸ்டர் **ஜோயலும் அள்ளி வீசுகிறார். சாது ஒரு பொய்யர்** என்று தெரிந்தும் அந்த பெரிய **தேவ தூஷனத்துக்கு** இவரும் **துணைபோகிறார்** என்று கண்டபின் **அவர் பிரசங்கத்தை ஆவடி ACA சபை ஆராதனையை UTubeல் கேட்க அருவருப்பாக இருக்கிறது.**

ஆரம்ப காலத்தில் பாஸ்டர் **ஜோயல்** அவர்கள் **தன் சொந்த வீட்டில் சபையில்** தன் முதல் **திருமண ஏற்பாட்டில்** சாட்சி இழந்து **வீட்டை விட்டு இவர் வெளியேறிய** அந்த காலகட்டத்தில் தம்பி ஜோயலுக்கு சாது செல்வராஜ் **ஆதரவு கொடுத்து** ஏஞ்ஜல் TVயில் அவரை பிரபல மாக்கியது **சாது செல்வராஜ்** ஆகும். அந்த **நன்றிக்கும்** சுய **ஆதாயத்திற்கும்** உண்மை **சத்தியத்தைவிட்டு தவறான உபதேசத்துக்கு சமரசமானது** ஆண்டவருக்கு செய்யும் **பெரிய துரோகம்** ஆகும். இவர் சாது செல்வராஜ் ஊழியத்துக்கு **பணம் அனுப்ப சொல்லி** சிபாரிசு செய்வதால் **சாது செல்வராஜின்** துர்கிரியைகளுக்கும் இவர் **பங்குள்ளவராய் இருக்கிறார்கள்.** II யோ. 11ம் வசனம்.

- ☐ **ஏஞ்ஜல்** TVயில் இவரைப்போல **துதி ஆராதனை** நடத்தும் Mr.& Mrs. **கிருபா தம்பதியினரும் சாது ஏஞ்ஜல் TVயில்** இவர்களை **உபயோகிப்பதால்** அவர்களுக்கு கிடைக்கும் அந்த பெரிய **விளம்பரத்துக்காக** கள்ள ஊழியரான **சாது செல்வராஜ்** (ஏஞ்ஜல்TV) அவர்களை அந்த கோடிக்கணக்கான **பட்ஜட் உள்ள பிசாசின் கட்டிட செலவுக்கு** மனசாட்சியைவிட்டு **சாதுவை என்னமாய் புகழ்கிறார்கள்**. என்னால் இவைகளை ஜீரணிக்க முடியவில்லை, அப்படியே இவர்கள் இதைத் தொடர்ந்தால் சாது செல்வராஜின் துர்கிரியைகளுக்கு இவர்கள் பங்குள்ளவர்களாகிறார்கள். (II யோ. 11ம் வசனம்)

அடுத்து .அனைத்து **பெந்தோகோஸ்தே சபைகளும் ஒதுக்கிவைத்த** நடன ஊழியர் **ஜான் ஜெபராஜ்** வீட்டுக்கே தம்பதியினர் இருவரும் சென்று அவரோடு இணைந்து பாடியிருக்கிறார்கள். ஜான் ஜெபராஜ் **தன் விளம்பரத்துக்காக கிருபா தம்பதிகளை** தன்னோடு இணைத்து *பாட வைத்து* **TVயில் வெளியிடப்பட்டது இவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தை சந்தேகிக்க வைக்கிறது. சாதுவின் பொய்யான தீர்க்கதரிசன ஊழியத்துக்கு இவர்கள் பண உதவி செய்யும் படி ஏஞ்ஜல்** TVயில் **தொடர்ந்து சிபாரிசு செய்யவார்களேயானால் கர்த்தரால் கொடுக்கப்பட்டுள்ள தாலந்துக்கு ஆபத்து உண்டாகும்.**

- ☐ அதேபோல **தம்பி பால் தினகரன்** அரசாங்க அதகாரிகளால் **பல கோடி தங்க கட்டிகளுடன் பிடிபட்டு பலகோடி ரூபாய்கள் பதுக்கிவைத்ததினால் அரசாங்கத்தால் பிடிபட்ட**

**சோர்வில் பால் தினகரன்** இருக்கும்போது **ஜான் ஜெபராஜ் தன் பாடலை** அவரைக்கொண்டு **பாட வைத்து** தானும் அவருடன் சேர்ந்து பாடி **தனக்கு பெரும் விளம்பரத்தை** ஜான் ஜெபதுரை பெற்று கொண்டார். இப்படி பல ஊழியர்கள் **தவறான** உபதேசத்துக்கும், **பொய்யான தீர்க்கதரிசனத்துக்கும்** துணைபோவது வேதம் கூறுவதுபோல் அந்த **பொய்யர்களின் துர்கிரியைகளுக்கும் உடந்தையாகி போனார்கள் என்று அர்த்தமாகிறது.**

## யுத்த பாஷை

சரி இப்போது வின்செண்ட் செல்வகுமாரின் **யுத்த பாஷையை** குறத்து மறுபடியும் கவணிப்போம். வேதத்தில் பவுல் **9 விதமான வரங்களை** குறித்து எழுதுகிறார். வேதத்தில் இந்த 9 வரங்களை தவிர ஏராளமான வரங்கள் உண்டு. பவுல் அவைகளில் குறிப்பிட்ட **9 வரங்களை மட்டும்** குறிப்பிட்டு எழுதுகிறார். அதில் **அன்னிய பாஷை வரம் ஒன்றாகும். அன்னிய பாஷை அடையாளம் அல்ல, அதுவரம்** Gift பரிசு. அன்னிய பாஷையை கேட்டு வாங்குவதல்ல. அது ஒரு சிலருக்கு மட்டும் **தேவையான** இடத்திற்கு **தேவையான** நேரத்தில் கர்த்தரால் **அருளப்படுவதாகும். சபையில் பேசுவதற்காக** அன்னிய பாஷை கொடுக்கப்பட வில்லை.

அந்த **9 வரத்திலும்** இல்லாத , வேதத்தில் உள்ள **மற்ற ஏராளமான வரங்களிலும்** சேராத ஒரு **புதுவித யுத்த அன்னிய பாஷை** என்ற பொய்யான வரத்தை குறித்து **வின்செண்ட் செல்வகுமார்** பேசியுள்ளார். உலகத்தில் **எந்த நாட்டிலாவது** எந்த **ஊழியராவது** அப்படி ஒரு **யுத்த அன்னிய பாஷையை** குறித்து யாராவது கூற கேட்டதுண்டா?

ஆனால் இவர் இப்போது **யுத்த பாஷையை** அறிமுகப்படுத்துகிறார். **இந்த யுத்த அன்னிய பாஷையை இத்தனை** வருடம் இவர் கூறாமல் **கடந்த ஆகஸ்ட் மாதம் 2022ல் ஆவியானவர் வின்செண்ட செல்வகுமாருக்கு** மட்டும் கற்றுக்கொடுத்ததாக **புளுகுகிறார்.** இந்த கடைசி காலத்தில் **பிசாசிற்கு விரோதமாக** போராட இந்த **யுத்த பாஷையை** புத்தம் புதிய வரமாக **அதாவது 10 வது வரமாக** விசுவாசிகளுக்கு ஆவியானவர் கொடுக்கிறாராம். இதை **அன்னிய பாஷை** பேசும் எந்த **பெந்தேகோஸ்தே சபை** பாஸ்டர்களாவது நம்புகிறீர்களா?

**வின்செண்ட் செல்வகுமார் கூட்டாளியும்** உடன் ஊழியருமான **நாலுமாவடி மோகன் C. லாசரசாவது** இதை நம்புவாரா? இதுவரை இவரின் **யுத்த அன்னிய பாஷையை** குறித்து **மோகன் C. லாசரஸ்** வாய் திறக்கவில்லையே ! ஏன்? **மோகன்சி.லாசரஸ்க்கு** உள்ள ஆவி **பரிசுத்த ஆவி** அல்ல என்பது இப்போதாவது விளங்குகிறதா !

அவருக்குள் இருக்கும் **அசுத்த ஆவி** திடீரென்று ஏஞ்ஜல் TVயில் **வின்செண்ட்டும் சாது செல்வராஜ்ஜீம்** வட்டிக்கு பணம் கொடுக்கும் ராஜஸ்தான் சேட்டுகள் அமர்வது போல் தரையில் மெத்தையில் அமர்ந்து **வின்செண்டின்** தவறான **தீர்த்ததரிசனத்துக்கு** விளக்கம் கொடுக்க **கர்த்தர்** என்னிடம் **மிகத் தெளிவாக** கூறினார் என்று **மோகன் C. லாசரஸ்** TVயில் கூறினார்.

சில மாதங்களிலேயே அந்த **கூட்டணியிலிருந்து** வெளியேறு என்று **ஆவியானவர் கூறினார்** என்று திடீரென்று அறிவித்து அந்த **TV** நிகழ்ச்சியை நிறுத்தி கூட்டணியையும் உடைத்துவிட்டாரே.

ஏஞ்ஜல் TVயில் **சாது சுந்தர் செல்வராஜ், வின்செண்ட்** ஆகியரோடு இணைந்து அந்த தீர்க்கதரிசன நிகழ்ச்சியில் பேச சொன்னதும் ஆவியானவர். **கூட்டணியை முறித்து** அவர்களைவிட்டு **பிரிந்து வந்துவிடு** என்று **தெளிவாய் சொன்னதும ஆவயானவர்.** இவர்கள் விஷயத்தில் இவர்களுடைய **அவியானவர் ஏன் இப்படி விளையாடுகிறார், இவர்களின் அவியானவர் TVயை பார்ப்பவர்களையும் குழப்பி விடுகிறாரே!** இந்த குழப்பத்தின் ஆவியானவர் வேதம் கூறும் **வேறொரு** கிறிஸ்து, **வேறொரு** ஆவி ஆகும். இப்படிப்பட்ட பிசாசின் ஆவியில் நிறைந்த இவர்களையும் மக்கள் நம்புகிறார்களே !

அந்த ஆவியில்தான் **எயிட்ஸ் HIV** வியாதி சுகமாவதை **இயேசு காட்டுகிறார்** என்றார். டாக்டர்கள் அந்த வியாதி சுகமாகவில்லை. அந்த ஆளின் **இரத்தம் பரிசோதித்த** பின் அந்த நபரின் **மெடிக்கல் ரிப்போர்ட்டை** டாக்டர்கள் அனுப்பிய பின் **மோகன் சி. லாசரஸ்** அடங்கிவிட்டார். இப்போது எந்த கூட்டத்திலும் **ஜெபத்தில்** ஆவியானவர் **மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்கு **எல்லா வியாதிகளையும்** காட்டுகிறார். ஆனால் இதுவரை **எயிட்ஸ் வியாதி** சுகமானதாக இவர் இப்போது கூறுவதில்லேயே? ஏன் ? **ஒரு ஏய்ட்ஸ் வியாதி** உள்ளவர்களும் இவர் கூட்டத்துக்கு இப்போது வருவதே இல்லையா? எவ்வளவு பெரிய **ஏமாற்றுத்தனம்** இது அல்லவா! **யுத்த அன்னிய பாஷை மோகன் லாசரஸ்க்கு** வருவதில்லையா? அவரிடம் **யுத்த பாஷைப்பற்றி** உங்கள் அபிப்ராயம் என்ன என்று வாசகர்கள் கேட்டு செல்லுங்கள்!

இந்த **யுத்த பாஷையால்** கிராமங்களிலும், **பட்டணங்களிலும்,** நகரங்களிலும் கிறிஸ்தவ விசுவாசிகளின் **வீடுகளிலும் உள்ள பிசாசை** இந்த **யுத்த பாஷையை** கொண்டு **அழித்துவிடலாம்** என்று சொல்லியிருக்கிறாராம். அதோடு இந்த **யுத்த அன்னிய பாஷையானது** நமது **அடி வயிற்றிலிருந்து** புறப்படுமாம். இப்போது நாம் இவருடைய **யுத்த பாஷை புறப்படும்** இடம் **கண்டுபிடித்தாகிவிட்டது.** அடி வயிற்றில் என்னென்ன **அசுத்தங்கள் இருக்கிறது** என்று நாம் எல்லாரும் அறிவோம். டாக்டர் என்ற முறையில் இவர்களின் **அடிவயிற்று அன்னிய பாஷைகளை** குறித்து எனக்கு சிறிப்புதான் வருகிறது. இதையும் நம்ப **நாலுமாவடியில்** ஒரு பெரும் **முட்டாள்களின் கூட்டம்** இருக்கிறதே!. இவர்களை நம்புகிற இந்த பைத்தியக்கார கூட்டம் மரித்தால் இந்த **இருவர் எங்கு போகிறார்களோ** அங்குதான் போய் சேருவார்கள் ! இவர்களுக்கு ஐயோ !

பிசாசு **அசுத்தமான இடத்தில்**தான் இருக்கும், அந்த அசுத்தம் நிறைந்த **அடிவயிற்றிலிருந்து வெளிவரும் யுத்த அன்னிய பாஷை** எப்படிப்பட்டதாயிருக்கும் ! நாற்றமெடுத்த அன்னிய பாஷையாகத்தானே இருக்கும்.

இந்த **கள்ள தீர்க்கதரிசி** மேலும் விளக்குகிறார், நாம் **யுத்த பாஷையில்** ஜெபிக்கும்போது **அடிவயிற்றிலிருந்து பிளேடைவிட கூர்மையான சக்கரம் போன்ற ஒன்று புறப்பட்டு** நமக்கு விரோதமாக புறப்படும் **சாத்தானின் தலையைக் கொய்த்து கொண்டு போய்விடுமாம். அதன்பின் சாத்தான் செத்துப் போய் விடுவானாம்.** இரவு முழுவதும் **வின்செண்ட் செல்வகுமார்** அவர்கள் **தெலுங்கு புராண டப்பிங் சினிமா** படம் பார்த்திருப்பார். அதன் விளைவுதான் **பிசாசின் தலையை கூர்மையான** சக்கரம் கொய்துகொண்டு போகும் என்கிறார்.

வேதம் என்ன கூறுகிறது. பிசாசின் தலையை கர்த்தராகிய இயேசு **கெத்சேமனேயில்** ஜெபிக்கும்போது அவர் **வியர்வை** துளிகள் **இரத்தத்தின துளிகளாக** பூமியில் சிந்தப்பட்டது. அப்போது அவரிடமாய் வந்த **பாம்பின் தலையை** தன் **குதிங்கால்** கொண்டு **நசுக்கிபோட்டார். தள்ளப்பட்ட பிசாசு** இயேசுவின் இரத்ததால் **ஆதியாகமத்தில்** கூறியபடி **தன் குதிங்காலால்** அதன் தலையை **நசுக்கிவிட்டபின்** வின்செண்ட் செல்வகுமாருக்கு மட்டும் **பிசாசின் தலை எங்கிருந்து வந்தது.**? விசுவாசிகள் ஜாக்கிறதை **மோகன் C.லாசரஸ்சும், வின்செண்ட செல்வகுமாரும்** வேத பாட வகுப்பு நடத்த போவதாக சிலவருடங்களுக்கு முன் அறிவித்தார். தயவுசெய்து அங்கு போய் விடாதீர்கள்.

**பொய்யான** அன்னிய பாஷை **மோகன் C. லாசரஸ், ராபின்சன்** போன்றோர் நடத்தும் **முழு இரவு ஜெப** கூட்டங்கள், **உபவாச ஜெப** கூட்டங்கள் வழியாக எப்படி அனைத்து **திருச்சபைக்குள்ளும்** நுழைந்ததோ அதே விதமாக **யுத்த பாஷை** என்ற **பிசாசின் பாஷையும்** சீக்கிரத்தில் சர்வசாதாரணமாக **நமது சபைகளுக்குள்ளும்** நுழையபோகிறது, **ஜாக்கிறதை!** சென்னையில் முழு இரவு ஜெப கூட்டங்களில் காதலர்கள் அன்னிய பாஷையில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கிறார்கள். முடிவில் பாடுகிறவரும் கீ–போர்டு வாசிப்பவரும் திருமணம் செய்து கொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். ஜாக்கிறதை.

கர்த்தர் நமக்கு கொடுத்த அதிகாரம் பிசாசசை எதிர்க்க **(கொல்ல அல்ல)** அதை வெல்ல **வசனம்** என்ற **சர்வாயுத அணிகலனை** அணிந்துகொள்ள கர்த்தர் ஆலோசனை கொடுத்திருக்கிறார். ஆனால் இவர்கள் பிசாசை கொல்ல முடியும் என்கிறார்கள்.

- ☐ நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து படகில் உறங்கிக்கொண்டிருக்கும்போது இயேசுவை **கொல்ல வந்த பிசாசை** தன் **ஒரு வார்த்தையால்** அதட்டினார் என்று எழுதியிருக்கிறது. **கடல் கொந்தளித்தபோது காற்றாக** புயலாக கடல் அலையாக இயேசுவை **அழிக்க வந்த பிசாசை அதட்டி ஒடுக்கினார்.** இதுவரை பிசாசின் கையில் பூமியின்மேல் **இருந்த பிசாசின் அதிகாரம்** அவனைவிட்டு **ஒழிக்கப்பட்டது.** பிசாசு **கடலாக கொந்தளித்த** போது **கடலை அதட்டி** எப்படி அடக்கினாரோ. அதை போலவே **இயேசுவின் இரத்தத்தால்** கழுவப்பட்டு மனம் திரும்பிய **அத்தனை விசுவாசிகளுக்கும்** கர்த்தர் **பிசாசை அடக்கும், துரத்தும்**

**அதிகாரத்தை** கொடுத்திருக்கிறார். ஆனால் **வின்சென்டோ** முட்டாள்தனமாக புதுமை உபதேசமான யுத்த **அன்னிய பாஷை**யை அறிமுகப்படுத்தினார். அது தேவையே இல்லை. கர்த்தருடைய பிள்ளைகளுக்கே பிசாசை துரத்த சகல அதிகாரமும் கர்த்தர் கொடுத்துவிட்டார்.

**வின்சென்ட கூறும் தலையில்லாத முண்டமாக** உள்ள **பிசாசின் தலையை** யுத்த **அன்னிய பாஷை** எப்படி **கொய்த்துகொண்டு போகும்?** அதோடு வின்செண்ட் செல்வகுமார் கூறுகிறார். **சாத்தான் செத்து** போய்விடும் என்றும் உளரியிருக்கிறார். இப்படிப்பட்ட **கள்ள ஊழியர்களின்** கூட்டணிகள் நடத்தும் நாலுமாவடி **திறப்பின் வாசல்** கூட்டங்களுக்கு போகும் அத்தனைபேரும் **பிசாசின் சொந்தக்காரர்களாக** திரும்பி வருவார்கள் ஜாக்கிறதை !

**பிசாசை சாகடிக்க** முடியாது. இயேசுவே பூமியில் இருக்கும்போது **பிசாசின் கிரியைகளைத்தான் அழிக்க வந்தார்** என்று வேதம் கூறும்போது (I யோ.3:8.) இவர்கள் **யுத்த பஷையில்** பிசாசை பிளேடை உபயோகித்து கொல்லுவார்களாம் என்ன. பிசாசு ஒரு பென்சிலைப் போல நினைத்துவிட்டார். அதனால் தான் பிசாசின் தலையை பிளேடால் சீவி கொன்றுவிடுவாராம்.

**பிசாசை கட்ட முடியாது! சபிக்க முடியாது! பிசாசை கொல்லவும் முடியாது!**
**நரகத்துக்கு அனுப்பவும் முடியாது.**

**மோகன் C. லாசரஸ்,** ராபின்சன், **வின்செண்ட் சாது செல்வகுமார்**, **ஆலன்பால்** இவர்கள் யாவரும் கூறுவதுபோல் **பிசாசை கட்ட முடியாது, சபிக்க முடியாது**, **ஆழிக்க முடியாது ,** நரகத்துக்கு போ என்று **கட்டளையிடவும் முடியாது.** வேதத்தை நன்றாக வாசித்து நான் எழுதியது உண்மைதானா என்று ஆராய்ந்து உங்கள் அபிப்ராயத்தை எழுதுங்கள்.

நான் எழுதியதில் வசன தவறு இருந்தால் உடனே எனக்கு எழுதி அனுப்புங்கள்.மேலே குறிப்பிட்ட கள்ள ஊழியர்களின் **முட்டாள் தனமான** அசுத்த ஆவியின் **அன்னிய பாஷையை** கற்றுக்கொள்ளாதீர்கள்.

**இயேசுவே பிசாசை அழிக்கவில்லை.** 1 யோ. 3:8 **பிசாசின் கிரியைகளை** (பிசாசை அல்ல) **அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்..**

சகோ. **மோகன் C. லாசரஸ்** போல **கவிழ்ந்து முகம் குப்புர கிடந்து ஜெபிக்கவும்** முயலாதீர்கள். அப்படியே **இயேசுவின் முகத்தை** ஜெபிக்கும்போது முகமுகமாக **கண்டு** அதைபார்த்து ஜெபிக்காதீர்கள். அப்படி நீங்கள் பார்த்தால் அது இயேசுவின் முகம் அல்ல, ஏமாந்துவிடாதீர்கள். அப்படி நீங்களோ அல்லது சகோ. **மோகன் C. லாசரஸ்** பார்த்தால் அது **காலண்டரில் வரைந்த இயேசுவின் முகம்தான்.** உங்கள் கண்களுக்கு தெரியும் அந்த **முகத்தை** நம்பாதீர்கள். அது **இயேசு கிறிஸ்துவின் முகம் அல்ல.**

# CSI பிஷப் வீட்டில் அமலாக்க துறையினர் சோதனை (RAIDED)



CNI (Church of North India) மத்திய பிரதேஷ் பிஷப் **Rt. Rev. P.C. Singh ஜபல்பூர் டையோசிஸ்** அவர்களின் டையேசிஸ் ஆபீசிலும், பிஷப்பின் வீட்டிலும் **அமலாக்க துறையினரும் (EOW)Economic Offences Wing** அவர்களும் இணைந்து பிஷப் வீட்டை பரிசோதித்ததில் **16 மில்லியன்** இந்திய ரூபாய்கள் பதுக்கி வைத்திருப்பதை 2022 **செப் 8ம் தேதி** கண்டு பிடித்தனர். பத்திரிக்கைளாளர் களிடம் **அதிகாரிகள்** பேசும்போது பிஷப் **P.C. சிங்** நிர்வாகம் செய்யும் டையோசிஸ் CNI பள்ளிகளில் மாணவர்கள் அவர்களின் பெற்றோர்களிடமிருந்து பள்ளிக்கூட **முன்னேற்றத்துக்காக** என்று கூறி **27 மில்லியன் இந்திய ரூபாய்களை** வெளிப்படையாக பெற்றுள்ளார் என்று ஏராளமான புகார்கள் வந்ததால் இந்த சோதனை நடத்தினர். ஆனால் தீடீர் சோதனையில் **16 மில்லியன்** ரூபாய் மட்டும் **கட்டுக்கட்டாக** கிடைத்தது என்றும் மற்ற மீதி சுமார் **11 மில்லியன்** ரூபாய் எங்கு ஒளித்து வைத்திருக்கிறார் என்பதை அதிகாரிகள் பிஷப் அவர்களின் தொடர்புடைய பல்வேறு இடங்களில் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்ற பழமொழி உண்மையாயிற்று. சபை **தலைவர்களே** இப்படி பணம் திருடும் **கொள்ளைக்காரர்களாக** இருப்பதால் தேவ நாமம் தூஷிக்கப்படுகிறது.

மேலே பிஷப் கொள்ளையடித்த ரூபாய்களுக்கு தனி கருப்பு பாக்சில் குறிப்பிட காரணம் என்ன என்றால் இதுவரை அணைத்து டையோசிஸ்களில் சில **பிஷப்மார், கமிட்டியினர் கொள்ளையடித்தது** எல்லாம் **கோடி, லட்சம்** என்றுதான கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்த பிஷப் **பலே கில்லாடியாக** இருப்பார் போலிருக்கிறது, கொள்ளையடித்த பணம்

முழுவதும் **மில்லியன் கணக்கில்** இருப்பதை இப்போதுதான் நாங்கள் முதல்முதல் கேள்விப்படுகிறோம். மிக துணிகரம் – தெய்வ பயம் இல்லை.

இதைவிட **அதிக பணம்** நம் **கேரள மாநிலத்தில்** உள்ள **ஒரு பிஷப்** அவர்களிடம் **அகப்பட்டிருக்க வேண்டும்.** சமீபத்தில் இந்த **பிஷப் வீட்டிலும்,** ஆபிஸிலும், **டையோஸிஸ்** செகரட்டரி வீடுகளிலும் தொடர்ந்து Raid நடந்ததை **TVயிலும் பத்திரிகைகளிலும்** கண்டிருப்பீர்கள், **ஆவணங்கள்** பல சிக்கியிருக்கிறது. **ரொக்கப் பணம் எவ்வளவு அகப்பட்டது** என்பதை இதுவரை **தெரிவிக்கவில்லை.** காரணம் **பிஷப்** அவர்கள் **ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்லப்பிள்ளையாக** இருப்பதால் இந்த குறிப்பிட்ட **பிஷப் மட்டும்** பலமுறை நீதிமன்றம் இவரை கைது செய்ய கட்டளையிட்டும் அரசியல் வாதிகளின் செல்வாக்கால் இவர் **சிறைக்கு செல்லாமல்** தப்பித்துக் கொண்டிருக்கிறார்.

இது CSI & CNI அனைத்து கிறிஸ்தவ சபைகளுக்கும் தலைகுனிவை உண்டாக்கிவிட்டது. இந்த லட்சணத்தில் CSIயின் அனைத்து சபைகளின் **75 வது பிளாட்டினம் ஜூபிலி** கொண்டாட இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. தென் இந்திய அத்தனை திருச்சபைகளிலும் ஊழல் ஊறி கிடக்கிறது. **CSIயின் பிளாட்டினம் ஜூபிலியை** குறித்து எப்படி சந்தோஷப்படுவது. இதை அனைத்து CSI திருமண்டல அங்கத்தினர் சிந்திக்க வேண்டும்.

கடந்த வருடமும் **அழைக்கிறார்** ஸ்தாபகரின் **யுனிவர்சிட்டியின்** அறையில் பிடிக்கப்பட்ட **கோடி கணக்கான பணம்** வீட்டில் கண்டுபிடிக்கப்பட்ட காணிக்கைகளை **தங்க கட்டிகளாக** மாற்றி பதுக்கி வைத்ததை **அதிகாரிகள் கண்டுபிடித்த விவரம்** தமிழ்நாடடில் அனைத்து சபை மக்களும் பொது மக்களும் அறிந்து காரி துப்பாத குறையாக பேசிக்கொண்டனர். இப்போது இவர்களை கண்டு அருவருத்து இவர்களின் குடும்பத்தையே மக்கள் ஒதுக்கி தள்ளினர். **மகனுக்கு 60 வயது பிறந்த நாள்** வந்த போது எதிர்பார்த்த மக்கள் அந்த **விழாவுக்கு** வராதது **மக்கள், ஆயர்கள், பிஷப்மார்** அவர்களை **ஒதுக்கிவிட்டனர்** என்று கூறி கொண்டார்கள்.

இப்போது **இவர்களின் பொது கூட்டங்கள்** நாட்டில் எங்குமே நடப்பதில்லை. வீட்டிலும் இவர் பிள்ளையும் **சாட்சியில்லை.** அவர் வீட்டைவிட்டு விலகியிருக்கிறார். **அந்நிய நுகத்தில்** மகள் **இணைக்கப்பட்டதே** காரணம் என்கிறார்கள். இத்தனை நடந்தும் இவர்கள் உணரவோ, மனவேதனையோ அடைவில்லை. காரணம் பல தலைமுறைகளுக்கு தன் குடும்பம் பிள்ளைகள் யாவரும் **ஆடம்பரத்தோடு வாழ** உலக முழுவதும் **கோபுரம்** என்ற பெயரில் சொத்துக்களை **மில்லியன் டாலர் கணக்கில்** சேர்த்துவிட்டனர். மக்கள் **கர்த்தருக்கென்று** கொடுத்த **காணிக்கையில்** கை வைத்தவர்கள் **வீட்டில் சமாதானம்** இழந்து நியாய தீர்ப்புக்கு காத்திருக்கிறார்கள்.

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



என் ஊழியத்தின் ஆரம்ப கால நண்பரும், மெட்ராஸ் CSI டையோசிஸ் ஆயராக பணியாற்றி ஓய்வு பெற்றவரும் Gospel Partner"s Movement என்ற பெயரில் உள்ள மிஷனரி ஸ்தாபணத்தின் Patron ஆகவும் பொதுச் செயலாருமாகவும் பொறுப்பேற்று நடத்திய மிஷனரி பாரம் கொண்ட **Rev.R.மாணிக்கவாசக திரவியம்** அவர்கள் தனது 83வதுவயதில் 14 செப்டம்பர் 2022ல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். ஐயா அவர்களுடைய மனைவி **Mrs.நளினி திரவியம்** அவர்களையும், பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் கர்த்தர் ஆறுதல் அளித்து சமாதானம் அருளுவாராக.

1964ம் வருடம் நான் **டேனிஷ்பேட்டையில்** டாக்டராக பணியாற்றியபோது **நானும் சகோ.திரவியம்** அவர்களும் அறிமுகமானோம். நான் 1965ம் வருடம் சகோ. P. சாமுவேல் அவர்கள் மூலமாக இரட்சிக்கப்பட்டேன். அன்றைய ஆரம்ப கால ஆவிக்குரிய நண்பர்களாக **திரு.மாணிக்க வாசக திரவியம்** அவர்களோடு சகோ. **ஞானராஜ்** அப்போது இவர் பெத்தேல் பள்ளி ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருந்தார். **சகோ. சம்பத்** இப்போது ஆயராகி, **பிஷப்பாகி** ஓய்வு பெற்றுவிட்டார். இவரோடு **சகோ. வீரராஜ்** இப்போது கர்னாடகா டையோசிஸ் ஆயராக பணியாற்றிக் ஓய்வுபெற்று இப்போது அமெரிக்காவில் தமிழ் சபைக்கு ஆயராக பணியாற்றிக்கொண்டிருக்கிறார். இவர்களோடு **Dr. புஷ்பராஜ்** ஆகிய நானும் இணைந்து 1953ல் சகோ. **P. சாமுவேல்** அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட **VBS**ல் நாங்கள் ஐவரும் VBS B டீமாக சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய பல ஊர்களுக்கு செல்வோம் . நாங்கள் இரண்டு குழுவாக தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் ஊழியங்கள் செய்தோம். நான் மாதத்துக்கு இரண்டு முறை மட்டும் இவர்களோடு இணைந்து ஊழியம் செய்தேன். சில மாதங்களிலேயே **Scripter Union** ஆரம்பிக்கப்பட்ட புதிதில் அவர்களோடு (என்னை தவிர) மற்ற சகோதரர்கள் Scripter Unionல் இணைந்து தொடர் ஊழியம் செய்தார்கள்.

அந்த காலத்தில் **சகோ. மாணிக்க வாசக திரவியம், சகோ. ஞானராஜ்** அவர்கள் ரயிலிருந்து இறங்கும்போது வெறும் பணியன் மட்டும் அணிந்துகொண்டு **அக்கார்டின்** என்ற இசை கருவியை தோளில் சுமந்துகொண்டு **சேலம் ஜங்ஷன்** ஸ்டேஷனில் இறங்கி

ஸ்டேஷனுக்கு மிக அருகில் உள்ள என் வீட்டுக்கு வந்து குளித்து இளைப்பாறி **டேனிஷ்பேட்டைக்கு** புறப்படுவார்கள்.

**டேனிஷ்பேட்டை பெத்தேலில் Dr. சாம் கமலேசன்** அவர்களின் தாயாரின் அறையில் **சகோ. சம்பத்** அவர்கள் அமர்ந்து **கிட்டார்** இசை கருவியை மீட்க **சகோ. ஞானராஜ்** அவர்களும் **சம்பத் அவர்களும்** பல ஆங்கில பாடல்களை பாடி நானும்கூட அமர்ந்து ரசித்து சிரித்து மகிழ்ந்த நாட்கள் மறக்க முடியாத நாட்களாகும். **VBS**காக பல புதிய பாடல்களை அங்குதான் செய்கையோடுள்ள பல பாடல்கள் இயற்றப்பட்டது. (Action Songs)

அதன்பின் சகோ. சம்பத் ஆயரானார், சகோ. **மாணிக்க வாசக திரவியம்** அவர்களும் ஆயரானார், சகோ. **வீரராஜ்** அவர்களும் ஆயரானார், இவர்கள் யாவரும் சபை ஆயர்களாக மாறினார்கள். சகோ. ஞானராஜ் அவர்கள் மட்டும் ஆயராக பட்டம் பெற்றாலும் சபை மேய்ப்பராக பொறுப்பேற்காமல் **சிறுவர் ஊழியத்தின் தலைவரானார்.**

இதில் Rev. **மாணிக்க வாசக திரவியம்** அவர்கள் **ஓய்வு பெற்றும்** மிஷனரி ஸ்தாபண தலைவராகவும் ஊழியராகவும் மாறி **பஞ்ஜாப், ஹரியானா, மஹாராஷ்ட்ரா, ஜார்கண்ட் தமிழ்நாடு** ஆகிய மாநிலங்களில் தன் உடன் பொறுப்பாளர்களோடு இணைந்து **பல ஆலயங்கள்** கட்டவும் பல **கிளை சபைகளை** உருவாக்கவும் காரணமாணவராக விளங்கினார்.

அன்னாரை இழந்த **நற்செய்தி பங்காளர் இயக்க** பொறுபாளர்களுக்கும் மிஷனரி களுக்கும் மற்ற ஊழியருக்கும் கர்த்தர் ஆறுதல் கொடுத்து அந்த மிஷனரி ஸ்தாபனமும் தொய்வில்லாமல் சிறந்து பெருக கர்த்தர் அருள் செய்வாராக என்று ஜெபிக்கிறேன.

– ஜாமக்காரன் Dr. புஷ்பராஜ்

## ஜாமக்காரன் பெயரில் பொய்யான YouTube

ஜாமக்காரன் பெயரில் திருட்டு YouTubeபை ஒரு நபர் சில காலமாக வெளியிட்டுக்கொண்டு வருகிறார். அனைத்து ஊழியர்களையும் மிகமோசமான வார்த்தைகளை உபயோகித்து அசிங்கப்படுத்துகிறார். அவர் தன்னுடைய YouTube உபயோகிக்க என் பத்திரிகை பெயரை சூட்டி அதை மிக தவறான காரியத்துக்கு உபயோகிக்கிறார். ஏற்கனவே என் **ஜாமக்காரனில்** அந்த தவறான **YouTube**க்கும் **ஜாமக்காரன் பத்திரிக்கைக்கும்** எந்த வித தொடர்பும் **சம்பந்தமும் இல்லை என்பதை பலமுறை அறிவித்துவிட்டேன்.** அவர் வார்த்தை கேட்டாலே அவர் **இரட்சிக்கப்படாத நபர்** என்று விளங்கும். **பல ஊழியர்களை பிளாக்மெயில்** செய்து **மிரட்டுகிறார்** என்று கேள்விப்பட்டேன். அந்த YouTubeஐ **வெளியிடும் நபரை** யாராவது **கண்டுபிடித்தால்** அவர் **பெயர்** அவர் **தொலைபேசி எண்** ஆகியவற்றை கண்டுபடித்து சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே நான் **ஜாமக்காரன்** பத்திரிகையில் குறிப்பிட்டதுபோல எனக்கு **YouTube, WhatsApp** எதுவும் இல்லை என்பதை அறியுங்கள.

# கர்த்தரின் கிருபையால் மறுபடியும் ஊழியத்துக்கு புறப்பட்டுவிட்டேன்

கடந்த **இரண்டரை வருடமாக** ஊழியத்துக்காக வெளியே எங்கும் செல்லாமல் **கொரோனா** காரணமாக வீட்டில் **முடங்கி கிடந்தேன்.** கொரோனா வியாதியில் அகப்பட்டு **மரண தருவாயில்** என் ஆண்டவர் என்னை சுகமாக்கி **உயிர் பிச்சை கொடுத்து,** பழைய பெலத்தையும் கொடுத்துவிட்டார். இவ்வளவாய் கிருபை காட்டிய என் தெய்வத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டாமா? சுகமாக்கிய பிறகும் கொரோனா கிருமிக்கு பயந்து வீட்டில் இருந்தால் ஏன் ஆயுளை நீட்டி கொடுத்ததின் திட்டம் நிறைவேறாதே.

இந்த விஷயத்தை என் மனைவியிடம் கூறி பகிர்ந்துகொண்டேன். என் மனைவியும் என் பிள்ளைகளும்தான் என் நன்மைகளுகாக என்னை வெளியே போகாதபடி தடுத்தார்கள். அதற்காகத்தான் முதலில் என் மனைவிக்கு விவரங்களை புரிய வைத்தேன், அவர் பிள்ளைகளிடமும் கூறினார்கள்.

முதல் தைரியம் வந்த விதம் **மலையாள** ஜாமக்காரன் பத்திரிகையின் மொழிபெயர்புக்கு சேலத்தில் யாரும் இல்லாததாலும் இரண்டு மாத **மலையாள ஜாமக்காரன்** அனுப்ப முடியாமல் போனதாலும் சேலத்திலிருந்து ஒரு இரவு பயனமாக கேரளா தலைநகரான **திருவனந்தபுரத்துக்கு தைரியமாக** பயனமானேன். வழக்கமாக நான் தங்கி எழுதும் லாட்ஜ்க்கு சென்றேன். புறப்படும் முன்பே மொழி பெயர்க்கும் நபரை லாட்ஜ்க்கு வர சொல்லி இருந்தேன். ஒரே நாளில் இரண்டு மாத ஜாமக்காரன் செய்திகளையும், கேள்வி – பதில்களையும் இருவரும் சேர்ந்து மொழிபெயர்த்து முடித்தோம்.

காலை 8-30 மணிக்கு தொடங்கி மாலை 5-00 மணிக்கு முடித்தோம். மதிய உணவு ஓட்டலில் தீர்ந்துவிட்டது. காரணம் மாலை 5-00 மணி ஆனதால் **பரோட்டா மட்டும்** கிடைத்தது. அதன்பின் மாலை 6-00 மணிக்கு நான் திரும்ப சேலம் வருவதற்காக ரயில்வே ஸ்டேஷன் வந்தாக வேண்டும். இப்படி **மிஷின்போல்** இயங்கினதால்தான் ஒரே நாளில் இரண்டு மாத ஜாமக்காரன் **மலையாளத்தில்** மொழி பெயர்த்து முடித்தோம். மறுநாள் காலை நான் சேலம் வந்து சேர்ந்தேன்.

இந்த பயனம் எனக்கு தைரியத்தை கொடுத்தது. அதன்பின் எனக்கு **கன்வென்ஷனில்** பேச அழைப்பு வந்த **கடிதம், Emailக்கு** தேதிகளை உறுதிபடுத்தி பதில் அனுப்பி கொண்டேயிருக்கிறேன். அப்படி அவர்களுக்கு கொடுத்த தேதியில் கன்வென்ஷனில் பேசிக்கொண்டு வருகிறேன்.

# மஹாராஷ்டிரா மாநிலம்

## மும்பை – பாண்டூப் தமிழ் மெத்தடிஸ்ட் சபை கூட்டங்கள்

**மும்பையில் பாண்டூர் மெத்தடிஸ்ட் தமிழ் சபை** கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடந்தது. இந்த சபை மிகச் சிறிய சபையாக இருந்த காலத்திலும் கன்வென்ஷனில் பேசினேன். அதன்பின் ஆலயத்தை விரிவுபடுத்தி புதுப்பித்து திறப்பு விழா நடத்திய காலத்திலும் இரண்டு முறை நடந்த கன்வென்ஷன்களிலும் செய்தி கொடுத்தேன். **பாண்டூப் தமிழ் மெதடிஸ்ட் சபை மக்கள்** என்னை மிகவும் நேசித்தபடியால் கடந்த **அக்டோபர் மாதம்** சபை ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர் இணைந்து மிக நல்ல ஏற்பாடுகளை செய்து கூட்டங்கள் நடத்தினர். அவர் ஜெப ஆயத்தத்தோடு இக்கூட்டங்களை ஏற்பாடு செய்ததால் கூட்டம் மிகவும் ஆசிர்வாதமாக முடிய காரணமாயிருந்தது.

எல்லா கூட்ட செய்திகளையும் வீடியோ எடுத்து அதை Youtubeல் வெளியிட்டு லட்சக்கணக்கான மக்கள் செய்திகளை கேட்டு ஆசீர்வதிக்கப்பட சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருந்தனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. மக்கள் பலர் இரட்சிக்கப்பட்டனர். அதில் கேள்வி – பதில் பகுதி மிக சிறப்பாக அமைந்தது. Youtube பார்த்த பல்வேறு மாநிலத்தில் உள்ளவர்கள் தொலைபேசியில் என்னோடு தொடர்பு கொண்டார்கள்.






சுமார் ஒன்றரை மணிநேரம் நின்றுகொண்டே பேச கர்த்தர் எனக்கு புதிய பெலன் தந்தார். கர்த்தருக்கே துதி கனம் மகிமை உண்டாவதாக. **Rev. கிரிஸ்டோபர் ராஜா**, ஆண்கள் ஐக்கிய சங்க தலைவர் திரு. E. **தினகர்** அவர்கள் எனக்கு ரயில்வே ஸ்டேஷனிலிருந்தே வரவேற்று கூட்டத்திலும் எனக்கு மரியாதை செய்து சபை சார்பில் வரவேற்று உபசரித்தார்கள். எல்லா நாளும் தொடர் கூட்டங்கள் நடத்தியபடியால் தனித்தனியாக சபை மக்களோடு பேசி ஜெபிக்க முடியாமல் போனது.

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# *பெங்களூர் ஸ்தோத்திர சிறப்பு கூட்டங்கள்*







பெங்களூர் **மெஜஸ்டி** அருகில் **ராஜாஜி நகரில்** உள்ள **மிஸ்பா கிறிஸ்தவ ஐக்கிய சபை MIZPAH Christian Assembly Church**ல் வைத்து நடந்த இந்த ஸ்தோத்திர கூட்டம் மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்தது.

**பாஸ்டர் பாபு** அவர்களும் குடும்பத்தினரும் உறவினர்களம் பலவேறு ஊர்களில் இரநது வந்து பங்குகொண்டனர். அவர்களோடு சபை மக்களும் கூட்டங்களில்பங்குகெண்டனர். சபை நிர்வாகிகளும் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர். கூட்டம் ஆசீர்வாதமாக நடந்தேறியது.



இந்திய ஜாமக்காரன் வாசகர்கள்

அனைவருக்கும்

**75 வது ஆண்டு**

**மகிழ்ச்சி நிறைந்த சுதந்திர தின**

**வாழ்த்துக்கள்**



- ஜாமக்காரன்

**AUGUST- 2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj**, 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.